# சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 65.ஸ்ரீமான் கோரா கும்பார்

---

பண்டரீநாதனின் மிக உயர்ந்த ஆத்மார்த்த பக்தர்களின் முன் வரிசை நிற்பவர்களில் இவரும் ஒருவர்.குயவர் இனத்தில் தோன்றி சதா பிறப்பை அறுக்கும் ஞானம் வேண்டி இறைவனைப் பாடிப்பாடி சமாதி கதி அடைந்த பேறு பெற்றவர்.அதன் பலனாய் அவர் அறுத்த வினைகள் பற்பல. ஸ்ரீநாம தேவர் வாழ்க்கைக் காலத்திலேயே இவரும் அவருடன் இணைந்து ஆன்மீகப் பணிகள் செய்தார்.

**ஆன்மீக சாதனைகள்:**

* ஒரு நாள் சமாதி நிலையில் தன் உடல்-மனம்-அறிவு ஆகிய படிகளைத் தாண்டி ப்ரஹ் சத்யத்துடன் லயித்தார்.அச்சமயம் அவரது உடல் மட்டும் சேற்றை மிதித்துக் கொண்டு இருந்தது.அப்போது சேற்றில் கை வைத்து விளையாடிய தன் ஒரே பெண் குழந்தையைக் கால் இடறி உள்ளே இழுத்து மிதித்துச் சிதைத்தது.அதை சத்யமான ப்ரஹச் செயலாகவே ஏற்றுக் கொண்ட் மஹான் இவர்.அதன் மூலம் வாழ்க்கையில் மகன்-மகள் பந்தத்தை அறுத்தார்.

* இவரது கதியைப் புரிந்து கொள்ளாத ஊரார் இவரைக் கொலைகார பக்தன் என்று தூற்றியதை ஏற்றுக் கொண்டார்.அதன் மூலம் தான் ஆன்மீக வாழ்வில் இருக்கும் போது அத்தகைய வினைகள் உண்டாகும் என்பதை ஏற்கிறார்.

* இவரது பாவத்தைத் தூற்றிய மனைவி, அதற்குக் காரணமான பாண்டுரங்கனை அவமானம் செய்வதை இவர் கண்டித்தார்.அப்போது அவர் "இறைவன் மீது சத்யம், என்னைத் தொடாதீர்" என்று தற்பாதுகாப்பிற்குக் கத்த அத்தோடு மனைவியின் அனைத்து சுகங்களையும் அறுத்தார்.

* முன் ஜென்ம வினையால் மீண்டும் மனைவியின் தங்கையைக் கல்யாணம் செய்யும் வினை ஏற்பட்டும், அப்பெண்ணுடன் தாம்பத்ய உறவு கொள்ளாமல் ப்ரம்மச்சரியம் காத்தார்.

* இரு பெண்களும் இவரை பலாத்காரம் செய்ய வரும் போது பாண்டுரங்க சத்யம் சொல்லித் தன் கைகளையே வெட்டிக் காயம்படுத்திக் கொண்டார்.புலன் அடக்கப் பயிற்சியில் தலை சிறந்தி விளக்கியதை ஸ்ரீநாம தேவர் அதிசயித்துப் போற்றினார்.

* இவரின் தம்பி எற்றண்ணா தேவ் வடிவில் இறைவன் குயவர் பணி செய்தார்.அதை நாம தேவர் உணர்ந்து பண்டரீபுரத்தில் மக்கள் முன் கூறி இவரது பக்தியை ஊருக்கும் உணர்த்தினார்.

* நாம தேவர் மூலம் இறைவன் இவரது மனதைக் கலைத்து மீண்டும் சாதாரண மனிதனாக்க முயற்சித்தும் முதியவில்லை.அந்நிலையில் இவரது கைகள் பூரண குணம் பெற்றன.

* அதாவது "நான்" என்ற அகம்பாவத்தை அரவே ஒழித்து, செய்யும் வினைகளை விலக்கி சத்யத்துடன் லயிக்கும் கட்டத்தில் இவர் இருக்கிறார் என்று உணர வேண்டும்.இவரது ஆன்மீக மேன்மையை உணர்ந்த இரு மனைவிகளும் இவரை ஏற்றுக்கொண்டு ஆன்மீக வழியில் பயணித்தனர்.

* அதன் பலனாய் இவரது தூய மெய்யுணர்வின் சக்தியில் இருந்து இறந்த பெண் சிசுவும் உருபெற்று கைசேர்ந்தது.இவர் இல்லறத்திலேயே துறவறம் பூண்டு முக்தி பெற்றார்.இவரது புகழ் பண்டரீபுரத்தில் என்றென்றும் எதிரொலிக்கும்!

ஹரி ஓம்!